மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே,

"1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்."
என்று கோருகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரி முக்கியமான நகரங்களிலே அதிகமான ஸ்டாம்ப் டியூட்டி போடுவது நல்ல அம்சம் என்றாலும் கூட இதனால் இந்த ஆண்டுக்கு எவ்வளவு அதிகமாக வருமானம் கிடைக்கும் என்ற கருத்தைச் சொன்னால் நன்றாக இருக்கும். ஏனென்றால் இந்த மசோதாவிலே எந்த இடத்திலும் இவ்வளவு வருமானம் வரும் என்று கொடுக்கவில்லை. அந்த விபரத்தையும் கொடுத்தால் இந்த மசோதா நிறைவேற்றப்படுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதுதான் இந்த வரியைப் போட்டிருக்கிறோம். இனிதான் அந்த விபரத்தைச் சேகரிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஏ) 1975 ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"1975 ஆம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) * சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதோடு, அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

---

* 21—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

1975 அக்டோபர் 24] [திரு. செ. மாதவன்]

ஒரு நில உடைமையின் அனுபோக உரிமையை நில உரிமையாளர் திரும்பப்பெறுவது பற்றிய வழக்கில் அளிக்கப்படும் தீர்ப்பை நிறைவேற்றும் நடவடிக்கைகள் நில உடைமையின் அனுபோகத்தை உரியவருக்கு ஒப்படைப்பதைப் பொறுத்தவரை நிறுத்தி வைக்க 1950 ஆம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) சட்டம் (திருவாங்கூர்-கொச்சி சட்டம் 8/1950) வகை செய்கிறது. இச்சட்டம் 25—3—1950 அன்று செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் செல்திறனுடைய கால அளவு அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. இது 24—9—1975 அன்று செல்திறனற்றுப் போகவிருந்தது. எனவே, இதன் செல்திறன் கால் அளவை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்தது. அப்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் நடை பெறாததால், 1975 ஆம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 15/1975) அதிகார முறையில் வெளியிட வேண்டியது அவசியமாயிற்று. இந்த அவசரச் சட்டம் 17—9—1975 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டது.

இதனை இம்மாமன்றம் ஏற்று நிறைவேற்றுமாறு வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே,

"1975 ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்."
என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.